ஆட்சியில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எதையும் வென்று காட்டுவார்கள், அம்மா அவர்களுடைய நல்லாசியோடு என்று இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்டி, குந்தா வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தைப் பொறுத்தவரையிலும் வருகின்ற நிதியாண்டிலே அதற்கான நிதி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதி பெற்று வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 244, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

244—

புனல் மின் உற்பத்தி

***5732—திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியிலிருந்து புனல் மின் உற்பத்தி செய்வதற்கான ஆய்வுகள் மேற்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆம். ஒகேனக்கல் நீர் மின் திட்டம், மத்திய அரசுக்கு உட்பட்ட தேசிய நீர் மின் கழகத்தின்மூலம் செயலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள காவிரி நீர் மின் திட்டங்களில் ஒன்றாகும். கர்நாடகாவில் உள்ள சிவசமுத்திரத்திற்கும், தமிழ்நாட்டில் உள்ள மேட்டூருக்கும் இடையே 4 புனல் மின் திட்டங்களை முறையே சிவசமுத்திரம் புனல் மின் திட்டம் (270 மெகா வாட்), மேகதாது புனல் மின் திட்டம் (400 மெகா வாட்), இராசிமணல் புனல் மின் திட்டம் (360 மெகா வாட்) மற்றும் ஒகேனக்கல் புனல் மின் திட்டம் (120 மெகா வாட்) ஆகியவற்றை மைய அரசின் ஆளுமைக்குட்பட்ட தேசிய புனல் மின் குழுமத்தின்மூலம்

நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. திட்டச் செயலாக்கத்திற்கான வரையறுக்கப்பட்ட முத்தரப்பு ஒப்பந்தம் தமிழ்நாடு, கர்நாடகம் மற்றும் தேசிய நீர் மின் கழகத்தால் (National Hydro Power Corporation) கையெழுத்திடப்படவேண்டும். தமிழ்நாடு அரசு முத்தரப்பு ஒப்பந்தத்திற்கான ஒப்புதலை மத்திய அரசுக்கு ஏற்கெனவே அனுப்பியுள்ளது. ஆனால், கர்நாடக அரசு இன்னும் ஒப்புதலைத் தரவில்லை. முத்தரப்பு ஒப்பந்தம் கையெழுத்தான பிறகே ஒகேனக்கல் நீர் மின் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கமான அறிவிப்பிற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். மானியக் கோரிக்கையின்போது இந்தப் பிரச்சினையை நான் எழுப்பினேன். நான் அதோடு கோருவது, இந்த இரண்டு புனல் மின் திட்டங்களும் ஏற்கெனவே பரிசீலனையில் இருக்கின்றன. ஆனால், நான் இப்போது கூறியிருப்பது, ஒகேனக்கல்லில் அதிக விசையுடன் இருக்கின்ற நீர்வீழ்ச்சிகளில் மின்சாரம் தயாரிக்க இயலும் என்று பல வல்லுனர்கள் குறிப்பிடுகின்றார்கள். அத்தகைய நீர்வீழ்ச்சிகளில் ஆய்வு செய்ய இயலுமா என்பதுதான் என்னுடைய கேள்வி. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, அம்மாவினுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில் ஒகேனக்கல் பகுதியிலே தனியாக தமிழ்நாடு மின்சார வாரியம் மின் உற்பத்தி செய்வதற்கான கருத்துரு தயாரித்து, பரிசீலனைக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டன. ஆனால், அன்றைக்கும் கர்நாடக அரசு ஒகேனக்கல் பகுதியில் மின்சாரம்

தயாரிப்பதற்கு எதிர்ப்பினைத் தெரிவித்து, அந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கவில்லை. அதனால், அந்தத் திட்டத்தை அன்றைக்குச் செயல்படுத்த முடியவில்லை. மத்திய அரசின் ஆளுமைக்குட்பட்ட மத்திய நீர் மின் கழகத்திற்கு இந்தப் பிரச்சினையை எடுத்துச் சென்றதற்கு பின்புதான் மத்திய நீர் மின் கழகமே முன்வந்து, கர்நாடகமும் செய்ய வேண்டாம்; தமிழ்நாடும் செய்ய வேண்டாம்; நாங்களே இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறோம்; தமிழ்நாட்டுப் பகுதியில் இருக்கின்ற ஒகேனக்கல் திட்டத்தையும் நாங்கள் எடுத்துக்கொள்கின்றோம்; கர்நாடக பகுதியில் இருக்கின்ற சிவசமுத்திரம் முதல் ஒகேனக்கல் வரை இருக்கிற பகுதியில் நீர் மின் திட்டங்களை நாங்களே எடுத்துச் செயலாற்றி உங்களுக்கு மின்சாரத்தைப் பிரித்துத் தருகிறோம் என்று சொல்லியிருக்கிறது. அந்தக் கருத்தை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டது.

அந்த அடிப்படையிலே, அதற்கு முத்தரப்பு கமிட்டி என்று ஒன்று உருவாக்கப்பட்டு, மத்திய அரசினுடைய நீர் மின் கழகம், தமிழ்நாடு மின்சார வாரியம், கர்நாடக பவர் கார்ப்பரேஷன் ஆகிய மூன்றும் இணைந்து ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி, இந்த மின் திட்டங்களைச் செயல்படுத்தி மின் உற்பத்தியைப் பகிர்ந்துகொள்வது என்பது இந்தத் திட்டத்தினுடைய நோக்கம். ஆனால், முத்தரப்பு வரைவு ஒப்பந்தம் இறுதியாக்கப்பட்டு, மத்திய அரசு கொடுத்த அந்த முத்தரப்பு ஒப்பந்தத்தை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால், கர்நாடக அரசுதான் இன்று வரை சண்டித்தனமாக, வழக்கம்போல் கர்நாடக அரசுக்கே உள்ள பிடிவாதத்தின் காரணமாக, கடந்த மூன்று ஆண்டுகாலமாக அந்த முத்தரப்பு ஒப்பந்தத்திற்கு அவர்கள் ஒப்புதல் வழங்கவில்லை. அதனால்தான், இந்தத் திட்டம் இப்போது கிடப்பில் இருக்கிறது. அவர்கள் மத்திய குழுமத்தையும் செய்ய விடாமல் மறுக்கிறார்கள்; நாம் எடுத்துச் செய்யலாம் என்றாலும் அதற்கும் காவிரி ஆணையம் தடுக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சினையில் தீர்வு காணவேண்டியது மத்திய அரசினுடைய பொறுப்புதான். ஆகவே, மத்திய அரசு நினைத்தால் மட்டும்தான் இந்தத் திட்டங்களைச் செயல்படுத்தமுடியும். 'செவிடன் காதில் ஊதிய சங்கு' என்று சொல்வதுபோல, நாம் என்னதான் கோரிக்கைகள் வைத்தாலும் வழக்கம்போல மத்திய அரசு அதைக் கண்டுகொள்வதே இல்லை. இவ்வளவு பெரிய முக்கியமான திட்டத்தை, ஏறத்தாழ 1,150 மெகா வாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட திட்டத்தைச் செயல்படுத்த

2012 மே 10]

வேண்டிய பொறுப்புள்ள மத்திய அரசு இன்றுவரை பாராமுகமாக, கண்டுகொள்ளாமல் இருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டம் வராமல் இருப்பதற்கு முழு முதற்காரணம் மத்திய அரசுதான். இருந்தாலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அவருடைய செல்வாக்கைப் பயன்படுத்தி மத்திய அரசை வலியுறுத்துங்கள். அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தியே ஆகவேண்டுமென்று அம்மா அவர்கள் கர்நாடக அரசைத் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், ஒரு நிமிடம் இருங்கள். திரு. ரெங்கராஜன், நீங்கள் துணைக் கேள்வியாகக் கேளுங்கள். அதற்கு நான் வாய்ப்புத் தருகிறேன். அதிலே உங்களுடைய கருத்துக்களைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) கேள்வி நேரத்தில்* Point of Order *கிடையாது. நீங்கள் துணைக் கேள்வியாகக் கேட்டு, அதிலே உங்களுடைய கருத்தைச் சொல்லலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், கேளுங்கள்.*

திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காவிரியில் கர்நாடக அரசு விடும் ஆற்று நீரை நடுவண் அரசின் நீர் ஆணையம் அளவீடு செய்யும் இடம் ஒகேனக்கல்லிலிருந்து 5 மைல் தொலைவில் இருக்கிற பிளிகுண்டுலு என்ற இடமாகும். அதற்குப் பின்னர் வருகிற அவ்வளவு நீரும் தமிழகத்திற்குச் சொந்தமானது. தமிழக நிலப்பரப்பில் தமிழக எல்லையில்தான் அந்த நீர்வீழ்ச்சிகள் அமைந்துள்ளன. விசையுடன் இருக்கின்ற நூற்றுக்கும்மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள் இருந்தாலும், மிகுந்த விசையுடன் உள்ள நீர்வீழ்ச்சிகள் 300 அடியிலிருந்து 400 அடி ஆழம்வரை விழுகின்றன. அந்த விசையுடன் இருக்கிற நீர்வீழ்ச்சிகள் முழுக்க தமிழக எல்லைப் பரப்பில் இருக்கின்ற காரணத்தால், தமிழக அரசு அதைப் பரிசீலனை செய்யுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2012 மே 10

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்துதான் மாநில அரசினுடைய கருத்தும். ஏற்கெனவே நான் இங்கு சொல்லியிருக்கின்றேன். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்று சொன்னால், தமிழ்நாடு எல்லைக்குள்ளே இருக்கின்ற, உட்பகுதியில் இருக்கின்ற குந்தா நீரேற்று மின் திட்டத்தினை எடுத்துக்கொண்டால், காவிரி ஆற்றின் கிளை நதியான பவானி நதியினுடைய கிளை நதி குந்தா நதி. குந்தா நதியிலிருந்து சொந்தமாக நாம் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கே, மத்திய அரசு என்ன சொல்கிறது என்று சொன்னால், இதற்கு காவிரி ஆணையத்தினுடைய ஒப்புதலைப் பெறவேண்டும்; காவிரி ஆணையத்திலே பங்கு வகிக்கின்ற கர்நாடகம், ஆந்திரா, கேரளா, பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களுடைய ஒப்புதலைப் பெறவேண்டுமென்று கூறி, நமது பகுதியிலே இருக்கின்ற, முழுக்க, முழுக்க நமது தண்ணீரைப் பயன்படுத்தி மின்சாரத்தைத் தயாரிப்பதற்கே மத்திய அரசு அனுமதி தர மறுக்கிறது என்பதுதான் இப்பொழுது இருக்கின்ற பிரச்சினையே. ஆக, மத்திய அரசு இதை அனுமதிக்குமானால் இந்தத் திட்டங்களையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாகச் செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். நீங்கள் மத்திய அரசைப் பற்றி என்ன சொல்லப் போகிறீர்கள்?

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: நான் துணைக் கேள்விதான் கேட்கப்போகிறேன். அதைப்பற்றி அப்புறம் சொல்கிறேன். நான் simple-ஆகச் சொல்கிறேன். வேறொன்றுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், பெருஞ்சாணி அணையில் இரண்டு power projects இருக்கின்றன. ஒன்று செயல்பாட்டில் இருக்கிறது. இன்னொரு project, சுமார் 6 ஆண்டுகளாகத் துவக்கப்படாமல் இருக்கிறது. சுமார் 14,500 யூனிட் மின்சாரம் கிடைக்கக்கூடிய project ஆகும். அது எப்போது துவங்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்கிறேன். இது ஒன்று.

2012 மே 10]

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மத்திய அரசு துணை போகவில்லை; அதற்குச் சம்மதம் தெரிவிக்கவில்லை என்று குறை சொல்கிறார். ஆனால், அது நிச்சயமாக இரண்டு மாநிலங்களுக்கிடையேயான பிரச்சினை. எனவே, மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அதை நினைக்க வேண்டும். அவர் ரொம்ப சாமர்த்தியமாக, "மத்திய அரசு செய்யவில்லை, செய்யவில்லை" என்று சொல்வதை வரவேற்கிறேன். நிச்சயமாக மத்திய அரசு செய்யும் என்பதை உறுதியாகக் கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பிரின்ஸ், நீங்கள் வாய்ச் சொல் வீரராகத்தான் இருக்கிறீர்கள், please sit down. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மை நிகழ்வுகளைச் சொன்னால், அது குற்றச்சாட்டாக ஆகிவிட்டால், அதற்கு நான் பொறுப்பு இல்லை. உண்மை நிகழ்வுகளைச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) நான் அதைக் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. மற்றொன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசு செய்யும், செய்யும் என்று சொல்கிறார்களே, அவர்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, முடிந்தால் அதற்கெல்லாம் அனுமதியைப் பெற்றுத் தரட்டும். அதேபோன்று, அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தப் பகுதியினுடைய நீர் மின் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு வேண்டிய அனைத்து முயற்சிகளையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மிக விரைவிலே மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நாடாளுமன்றத்திலே அறிவித்து, இன்று பத்திரிகையிலே வந்த செய்தி, 'கடந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் 70,000 மெகா வாட் மின் உற்பத்திக்குத் திட்டமிட்டு, அதை நிறைவேற்ற முடியவில்லை' என்று மத்திய அரசாங்கம் ஒத்துக்கொண்டு, 'இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்றுவோம்' என்று அறிவித்திருக்கிறார்கள். அந்தத் தகவலை மட்டும் சொல்லிக்கொண்டு, பெரம்பூர் தொகுதி, இராயபுரம் தொகுதி,

திரு.வி.க. நகர் தொகுதி ஆகியவை சங்கமிக்கும் இடம்தான் பேசின் பிரிட்ஜ். அங்கே ஏற்கெனவே ஒரு மின் நிலையம் இருந்தது. அந்த மின் நிலையம் சுற்றுச் சூழலைப் பாதிக்கிற ஒரு நிலை இருந்தது. இப்போது அந்தத் இடத்தைப் பயன்படுத்தி, சென்னைக்குப் பயன்படத்தக்க அளவிலே, சுற்றுச்சூழலைப் பாதிக்காத வகையிலே, இயற்கை எரிவாயு போன்ற எரிபொருளை உபயோகப்படுத்தி, ஒரு மின் நிலையத்தை 100 அல்லது 110 மெகா வாட் மின் நிலையத்தை உருவாக்கும் திட்டம் அரசாங்கத்திடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது அந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல ஒரு ஆலோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் துணைக் கேள்விகளை அனுமதித்துள்ளீர்கள் நீங்கள். ஆயிரத்தில் ஒருவராக நாங்களும் உங்களைக் கருதிப் பாராட்டுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) உண்மையிலே, ஜனநாயகத்தில் இந்தக் கூட்டத் தொடரிலேயே ஓராயிரம் கேள்விகளை அனுமதிப்பது என்பது, நேர நெருக்கடியில், ஒரு மிகப் பெரிய முக்கியமான ஜனநாயக நடவடிக்கை என்ற முறையிலே உங்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதனுடைய பொருள் கூடுதலாக நேரம் கேட்பது அல்ல. இது உண்மையான பாராட்டுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலுக்குள் காற்றாலை அமைத்து மின்சாரம் தயாரிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று நேற்றைய தினம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி கடலுக்குள் காற்றாலை அமைத்து மின்சாரம் தயாரிக்க வாய்ப்பு இருக்கும் என்று

2012 மே 10]

சொன்னால், அதை மத்திய அரசு செய்வதற்கு முன்வருமா? நமது மாநில அரசு அதுகுறித்த செயற்குறிப்பை, வேண்டுகோளை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறதா? அது எத்தகைய முறையில் சாத்தியமான திட்டம் என்பது குறித்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன். அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்களும், மூலக் கேள்விக்குக் கொஞ்சம்கூட relevant இல்லாத ஒரு சூழ்நிலையிலும்கூட, அவற்றை நான் அனுமதிக்கிறேன். அதாவது, ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி என்று சொல்லும்போது, நீங்கள் Hydel Project-ஐ பற்றி question கேட்கலாம். அதற்கு answer இருக்கும். In spite of that - அப்படியிருந்தாலும்கூட, உங்கள் துணைக் கேள்விகளை நான் அனுமதிக்கிறேன் என்று சொன்னால், எந்த அளவிற்கு நான் உறுப்பினர்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணரலாம். (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலுக்குள் காற்றாலை அமைத்து, அதன் மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான திட்டம் அரசின் ஆய்வில் இருக்கிறது என்று நேற்றையதினம் நான் தெரிவித்திருக்கின்றேன். அதனுடைய அடிப்படையிலே இந்தத் திட்டத்தை மாநில அரசு செய்யுமா அல்லது மத்திய அரசு செய்யுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நல்ல கேள்விதான். கடல் பகுதிகள் என்று சொன்னால், நிச்சயமாக மத்திய அரசினுடைய அனுமதி பெறவேண்டும். ஆகவே, இந்தத் திட்டத்தை மத்திய, மாநில அரசுகள் இணைந்து, மத்திய அரசினுடைய ஒப்புதலோடுதான் இதைச் செய்ய வேண்டியிருக்கிறது. மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டிலே Centre for Wind Energy Technology என்று ஒரு மையம் இருக்கிறது. அந்த Centre for Wind Energy Technology தான் இதற்கு ஆய்வு மேற்கொண்டிருக்கிறது. அந்த ஆய்வறிக்கை, கடலுக்குள் எந்தெந்த இடங்களில் எல்லாம் வாய்ப்பு இருக்கிறது என்பதை ஆய்வு செய்து, அதிலே சாத்தியக் கூறுகளைக் கண்டறிந்து இதற்கு அவர்கள் ஒப்புதல் வழங்கியதற்குப் பின்பு

தமிழ்நாடு மின்சார வாரியம், கடலுக்குள் காற்றாலை அமைத்து, அதன் மூலமாக மின்சார உற்பத்தி செய்வதற்கான செயலாக்கத்தைச் செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தத் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகளை முடிப்பதற்கு ஏறக்குறைய இரண்டு ஆண்டுகாலம் ஆகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, நமது அம்மா அவர்களுடைய அரசு, அந்த ஆய்வுப் பணிகளைக் காலதாமதப்படுத்தாமல், விரைவாக சமர்ப்பித்திட வேண்டுமென்று கேட்டிருக்கிறது. மத்திய அரசினுடைய Centre for Wind Energy Technology-யினுடைய ஆய்வறிக்கை கிடைக்கப்பெற்றவுடன், அதிலே தனியார்களை ஈடுபடுத்தி, கடலுக்குள் காற்றாலை அமைத்து அதன் மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான வழிவகைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதிலே மற்றொன்று; கடலுக்குள் காற்றாலை அமைத்து, அதன் மூலம் மின்சாரம் தயாரிப்பதால் மீன் வளம் பெருகுவதற்கும் வாய்ப்பு இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். அந்த Pole—கடலுக்கு அடித்தளத்தில் அந்தக் கம்பம் நடப்படுவதால், அந்தக் கம்பத்தைச் சுற்றி கடல் பாசிகள் அதிகமான அளவிற்கு வரும். அதைச் சுற்றி மீன் வளம் பெருகும் என்ற மற்றொரு கருத்தும் இருக்கிறது. ஆகவே, மீன் வளத்தைப் பெருக்குவதற்காகவும், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின்சாரத்தைப் பெருக்குவதற்காகவும் கடலுக்குள் இருந்து காற்றாலை மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்கின்ற பணியை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைந்து மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள், அதை Artificial Reef என்று சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி அவர்கள்.

திரு. எம். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை மின்சார உற்பத்தியிலே மிகை மாநிலமாக மாற்றுவதற்காக நாள்தோறும் திட்டங்களைத் தயாரித்துக் கொண்டு, செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

2012 மே 10]

நம்முடைய தமிழ்நாட்டிலே கடல் அலைகளிலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக வல்லுநர்கள் ஆய்வறிக்கைகளில் தெரிவிக்கின்றார்கள். அந்த அடிப்படையில் நம்முடைய தமிழ்நாட்டைச் சுற்றி கடல் பகுதி மிகப் பெரும்பான்மையாக இருக்கின்ற காரணத்தால், கடல் அலைகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கின்ற திட்டம் தமிழக அரசின் செயற்குறிப்பில் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலுக்குள் அமைக்கப்படும் காற்றாலைமூலம் மின் உற்பத்தி செய்யப்படுகின்ற மின் திட்டம் தற்போது ஆய்வில் இருக்கிறது. ஆனால், கடல் அலைகளிலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்கான கருத்துருவை, ஆலோசனைகளை இப்பொழுது பல்வேறு நாடுகளிலிருந்து வல்லுநர்கள் வழங்கி இருக்கிறார்கள். சில பேர் அதற்கு முன்வந்துள்ளதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆய்வுகளை மேற்கொண்டு கடல் அலைகளிலிருந்தும் மின்சாரம் தயாரிப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருக்குமானால், அதையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 245, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

245—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

***2055—திரு. என்.டி. வெங்கடாச்சலம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெருந்துறை தொகுதி, ஊத்துக்குளி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?